# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 15 வியாழக்கிழமை 29.05.2025 கதிர் 209



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

யாழ் முற்றம்

Yarl Muttram

Youtube Channel






## யாழ். மாவட்டத்தைக் கட்டியெழுப்ப ‘மீண்டெழும் அலைகள்’ திட்டம் வகுப்பு

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. யாழ். மாவட்டத்தைச் சகல வழிகளிலும் கட்டியெழுப்புவதற்கான மேற்படி திட்டங்கள் ‘மீண்டெழும் அலைகள்’ என்று அறிமுகப் படுத்தப்பட்டன. 2025 மற்றும் 2035 காலப்பகுதியை மையப்படுத்தியதாகவே திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில்

# மஹிந்தானந்தவுக்கு 20 வருட கடூழியச் சிறை!

## நளினுக்கு 20 வருட கடூழியச் சிறை



கொழும்பு, மே 29

முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோருக்கு இன்று கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனையும், முன்னாள் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுக்கு 25 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

## துமிந்துவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!




கொழும்பு, மே 29

முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவை எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதிவான் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள சொகுசு தொடர்மாடி குடியிருப்பு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்த பெண்ணிடம் இருந்து தங்க

## நீர்கொழும்பில் துப்பாக்கிச் சூடு



நீர்கொழும்பு, மே 29

நீர்கொழும்பு, தலாதுவ பிரதேசத்தில் நேற்று புதன் கிழமை மாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது என்று நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

தலாதுவ பிரதேசத்தில் இரு நபர்களுக்கு இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

## மகசின் சிறைச்சாலைக்குள் போதைப்பொருட்களை கொண்டு செல்ல முயன்ற சிறை அதிகாரி சிக்கினார்



கொழும்பு, மே 29

கொழும்பு, மகசின் சிறைச்சாலைக்குள் போதைப்பொருட்களைக் கொண்டு செல்ல முயன்ற சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொரளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான சிறைச்சாலை அதிகாரி

## பாணந்துறையிலும் துப்பாக்கிச்சூடு! ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி!!




பாணந்துறை, மே 29

களுத்துறை மாவட்டம் பாணந்துறை, வேகட பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார்

# நாட்டில் குற்றவாளிகளை கைதுசெய்ய சிறப்பு மோட்டார் சைக்கிள் குழு!







கொழும்பு, மே .29

நாட்டில் இடம்பெறும் துப்பாக்கி சூடு உள்ளிட்ட குற்ற செயல்களை செய்து தப்பியோடிய சந்தேக நபர்களை கைது செய்வதற்காக ஆயுதங்கள் மற்றும் விரைவான அணுகலுடன் கூடிய சிறப்பு மோட்டார் சைக்கிள் குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

குறித்த குழு தென் மாகாணத்திற்கு பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் கித்சிறி ஜெயலத் தலைமையில் செயல்படுகின்றது.

இந்த குழுவில்46 அதிகாரிகள் இணைக்கப்படவுள்ளதுடன், இதில் தங்காலை, மாத்தறை பொலிஸ் பிரிவுகளை சேர்ந்த 8 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 15 நெடுஞ்சாலை மோட்டார் சைக்கிள்கள் என்பன உள்ளடக்கப்படவுள்ளன.

சிறப்பு மோட்டார் சைக்கிள் குழுவின் முன்னேற்றங்கள் குறித்து ஆராய்ந்த பின்னர் நாட்டின் குற்ற செயல்கள் அதிகமாக இடம்பெறும் பகுதிகளில் அவற்றை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அதிகாரிகளுக்கான அதிகாரப்பூர்வ விளக்கமளிப்பு விழா மே 26, அன்று மாத்தறை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு இந்திய அரசாங்கத்தின் "மனிதாபிமான உதவிகள்"

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு இந்திய அரசாங்கத்தின் "மனிதாபிமான உதவிகள்" வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று மாலை இடம்பெற்றது. குறித்த நிகழ்வு மாவட்ட செயலாளர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றிருந்தது. குறித்த நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் யாவ் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் மீனவர்கள் முதலான பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது தெரிவு செய்யப்பட்ட மீனவர்கள் முப்பது பேருக்கும், அதேநேரம் முல்லைத்தீவு மாவட்ட சமாசங்களின் சங்கத்தினருக்கும் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் குளிர்சாதனப்பெட்டிகள் ஆகியவை வழங்கி வைக்கப்பட்டன.

## தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் இன்று நள்ளிரவு முதல் அடையாள வேலைநிறுத்தம்!

கொழும்பு, மே .29

தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் இன்று நள்ளிரவு முதல் 48 மணி நேர அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாக தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் ஜி.ஜி.சி.நிரோஷன தெரிவித்துள்ளார்.

ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஏற்படும் தாமதங்களை நிவர்த்தி செய்தல் உள்ளிட்ட 10 கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு குறித்த வேலைநிறுத்த போராட்டம் திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



# அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் கொடுப்பனவை உயர்த்துமாறு கோரிக்கை– சின்மையா மிஷன் சுவாமி!

அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் கொடுப்பனவை உயர்த்துமாறு பிரதமர் ஹறிணி அமரசூரியவிடம், சின்மையா மிஷன் சுவாமி ராமசந்திர குருக்கள் பாபுசர்மா அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சரும், உயர்கல்வி அமைச்சருமான பிரதமர் ஹறிணி அமரசூரிய தலைமையில் இந்து சமய பாட ஆலோசனை சபைக்கான அங்கத்தவர்களின்நியமனம்இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இராமகிருஷ்ண மிஷன் சுவாமி அக்ஷரானந்த மற்றும் சின்மையா மிஷன் சுவாமி குணாதித்தானந்த மற்றும் ராமசந்திர குருக்கள் பாபுசர்மா இந்து கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் அனிருத்தன் கொழும்பு துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தா ராஜ்/ பாஸ்கரன் மற்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்மற்றும்அலுவலகர்கள் முதலானோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது சின்மையா மிஷன் சுவாமி ராமசந்திர குருக்கள் பாபுசர்மா அவர்கள், அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு வருடம் தோறும் நூல் கொடுப்பனவிற்கு மட்டும் 7500/- கொடுக்கப்படுகின்றது.

எனவே எதிர்காலத்தில் பாதீட்டில் நல்ல தீர்வு மேற்கொண்டு அவர்களுக்கான கொடுப்பனவை உயர்த்த வேண்டும் என்று பிரதமரிடம் கோரியிருந்தார்.

மேலும் அறநெறி பாடசாலைகளை ஊக்குவிப்பதற்கு பெற்றோர்களினதும், தனியார்வகுப்பு நிலையங்களின்பரிபூரண ஒத்துழைப்பையும் பெறுவதன் மூலம் அறநெறி கல்வியை வளர்த்துக்கொள்ள முடியும் எனவும் இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய உதவியில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் கையளிப்பு








முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் கேப்பாப்புலவு பிலவுக்குடியிருப்பு கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 'சந்திரன் கிராமம்' வீடுகள் கையளிப்பு நிகழ்வானது கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பில் புதன்கிழமை(28) இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையிலும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் பங்களிப்புடன் நடைபெற்றது.

குறித்த சந்திரன் கிராமத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் நிர்மானிக்கப்பட்ட 24 வீடுகள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவினால் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த கையளிப்பு நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலகநாதன், நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எம்.நஷிமுதீன்,தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் அரவிந்த ஸ்ரீநாத், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், கிராம அலுவலர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு யாழில் ஆரம்பம்!

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதற்கான வகுப்புகள் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி சுமார் மூன்று மாத காலங்கள் இடம்பெறவுள்ளன.

சனி, ஞாயிறு தினங்களிலும், அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணிமுதல் காலை 8.00 மணிவரை குறித்த வகுப்பு நடைபெறவுள்ளது.

இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

யோகக்கலை அடிப்படை கற்கைநெறியை பயிலவிரும்புவோர் அன்றையதினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்துகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள விரும்புவோர் 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச ரீதியில் சாதனை படைத்த இலங்கை பெண்கள்!

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் ஷார்ஜாவில் இடம்பெற்ற **Expo Culinaire** சர்வதேச சமையல்காரர் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 04 தங்கப் பதக்கங்கள், 03 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 03 வெண்கலப் பதக்கங்கள் வெல்லப்பட்டுள்ளது.

மே 21 முதல் 23 ஆம் திகதி வரை நடைபெற்ற குறித்த போட்டியில் உலகின் 20 நாடுகளைச்சேர்ந்த ஆயிரத்துக்கும்மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இந்த போட்டியில்,

யாழ்ப்பாணத்தை சேர்ந்த கஸ்தூரி ராமேஸ்வரன் ஒரு தங்கப் பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் 02 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளார்.

நீர்கொழும்பில் வசிக்கும் ஃப். நிலுஃபா, இந்தப் போட்டியில் ஒரு தங்கப் பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

கொழும்பில் வசிக்கும் எம்.ஆர்.எஃப். ஃபஸ்லியா 02 தங்கப் பதக்கங்களையும் 01 வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளார்.

குறித்த மூன்று பெண்களும் முதல் முறையாக ஒரு சர்வதேச போட்டியில் பங்கேற்று இத்தகைய வெற்றியை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

மூவரும் இன்று அதிகாலை 04.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஓய்வூதியத் திணைக்களத்தின் விசேட அறிவிப்பு

ஓய்வூதியத் திணைக்களத்தின் தகவல் அமைப்புகள் மீதான சமீபத்திய சைபர் தாக்குதலில் எந்த தரவும் சேதமடையவோ அல்லது இழக்கப்படவோ இல்லை என ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஓய்வூதியத் திணைக்களம் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையில்,

தடையற்ற சேவை வழங்கலை உறுதி செய்வதற்காக அதன் ஒன்லைன் அமைப்புகளின் செயல்பாட்டை மீட்டெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் பொதுமக்களுக்கு உறுதியளித்துள்ளது.

ஏப்ரல் முதல் வாரத்தில் துறையின் தகவல் பாதுகாப்பு உள்கட்டமைப்பை குறிவைத்து நடத்தப்பட்ட சைபர் தாக்குதல், உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இவ்வாறான மீறல் குறித்து அறிவிக்கப்பட்டவுடன் அதன் தொழில்நுட்பக் குழுக்கள் பாதிக்கப்பட்ட அமைப்புகளை மீட்டெடுக்கத் தொடங்கியதாக திணைக்களம் தெரிவித் துள்ளது.

மீண்டும் செயல்படுத்தும் செயல்முறை எந்த தரவு இழப்பு அல்லது சேதத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதை அது மேலும் உறுதிப்படுத்தியது.

இதற்கிடையில், தாக்குதலின் மூலத்தையும் தன்மையையும் தீர்மானிக்க இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழுவுடன் (SLCERT) இணைந்து சம்பவம் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளது (ஐ)

## ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இலங்கைக்கு வெண்கலப் பதக்கம்!

2025ஆம் ஆண்டுக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியானது தென் கொரியாவின் குமியில் நடைபெற்று வருகின்றது.

குமியில் உள்ள குமி சிவிக் அரங்கில் இடம்பெற்று வரும் 26ஆவது ஆசிய தடகள சம்பியன்ஷிப் போட்டியில், ஆண்களுக்கான 400 மீட்டர் இறுதிப் போட்டியில் இலங்கையின் ஓட்டப்பந்தய வீரர் கலிங்க குமாரேஜ் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

அவர் ஓட்ட இலக்கினை 45.55 வினாடிகளில் பூர்த்தி செய்து வெண்கலப் பதக்கம் வென்றார்.

# பிரதமரை பாராட்டியதால் கடும் அதிருப்தி: காங். எம்.பி. சசிதரூருக்கு பா.ஜ., ஆதரவுக்கரம்




பிரதமரை பாராட்டிய சொந்த கட்சி எம்.பி., சசிதரூர் மீது காங்கிரஸ் கடும் அதிருப்தியில் இருக்கும் சூழலில் அவருக்கு பா.ஜ., ஆதரவளித்துள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் குறித்து வெளிநாடுகளிடம் விவரிக்கும் குழுவில் காங்கிரஸ் எம்.பி., சசி தரூர் இடம்பெற்றுள்ளார். இத்தனைக்கும் அவரது பெயரை மத்திய அரசிடம் காங்கிரஸ் பரிந்துரை செய்யவில்லை.

பனாமா சென்றுள்ள அவர், மத்திய அரசுக்கு ஆதரவாக பேசினார். அண்மைக் காலமாக சசி தரூரின் பா.ஜ.,ஆதரவு பேச்சு காங்கிரஸ் மூத்த தலைவர்கள் மத்தியிலும், தலைமையிலும் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது.

சசிதரூரின் பேச்சுகள், அவரது தனிப்பட்ட கருத்து என்று காங்கிரஸ் கூறி உள்ளது. பா.ஜ., செய்தித் தொடர்பாளர் போல் கருத்து தெரிவிக்கிறார் என்று மூத்த தலைவர் உதித் ராஜ் விமர்சித்து இருந்தார்.

தொடர்ந்து காங்கிரஸ் தரப்பில் இருந்து சசிதரூருக்கு எதிராக விமர்சனங்கள் முன் வைக்கப்படும் சூழலில் அவருக்கு பா.ஜ., ஆதரவுக்கரம் நீட்டி இருக்கிறது.

இதுகுறித்து மத்திய அமைச்சர் கிரண் ரிஜ்ஜூ தமது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது

காங்கிரசுக்கு என்ன வேண்டும்? நாட்டின் மீது அவர்களுக்கு என்ன அக்கறை இருக்கிறது? வெளிநாடு சென்றிருக்கும் இந்திய எம்.பி.,க்கள் பிரதமருக்கும், நாட்டுக்கும் எதிராக பேச வேண்டுமா? அரசியலில் விரக்திக்கும் ஒரு எல்லை உண்டு. இவ்வாறு கிரண் ரிஜ்ஜூ குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

## கமலுக்கு மிரட்டல் முதல்வர் அமைதியாக இருப்பது ஏன்: சீமான் கேள்வி



தமிழிலிருந்து பிறந்ததுதான் கன்னடம்' என்ற வரலாற்று பேருண்மையை கூறியதற்காக நடிகர் கமல் ஹாசனை கன்னட அமைப்புகள் மிரட்டுகின்றன. பதிலடி தரவேண்டிய தமிழக முதல்வர் ஸ்டாலின் இதுவரைவாய்திறவாமல் அமைதியாக இருப்பது ஏன்? என்று நா.த.க., ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரது அறிக்கைத்தக்லைஃப்(வுாரப டகைந) படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழாவில், கமல்ஹாசன், 'தமிழில் இருந்து பிறந்ததுதான் கன்னடம்' என்ற வரலாற்று உண்மையை கூறியதற்காக அவரது படங்களை கர்நாடாகவில் திரையிட விடமாட்டோம், அவரை கர்நாடகாவில் நுழையவிடமாட்டோம் என்றெல்லாம் ஒரு சில கன்னட அமைப்புகள் மிரட்டல் விடுப்பதும், மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அடிபணியவைக்கநினைப்பதும், தக் லைஃப் திரைப்படத்தின் பதாகைகளைக் கிழித்து அவமதிப்பதும் வன்மையான கண்டனத்துக்குரியது.

இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள மொழிகளுக்கு மட்டுமல்ல உலக மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழி தமிழ்மொழிதான் என்பது உலக மொழியியல் அறிஞர்கள் ஆய்ந்தறிந்து ஏற்றுக்கொண்ட வரலாற்றுப்பேருண்மையாகும். அந்த வரையறைக்குள் கன்னட மொழியும் அடங்கும் எனும்போது அதை ஏற்பதில் கன்னட அமைப்புகளுக்கு என்ன சிக்கல்? வரலாற்று உண்மையை ஏற்க மனமில்லாத கன்னட வெறியர்களே, இத்தனை வன்முறை பேச்சுக்களையும் மிரட்டல்களையும் விடுக்கின்றனர். அதனை கர்நாடகத்தை ஆளும் காங்கிரசு அரசும் கண்டித்து தடுக்காது ஊக்குவிக்கின்றது என்பதுதான் பெருங்கொடுமையாகும். தமிழில் இருந்து கன்னடம் பிறந்தது என்ற கமலுக்கு எதிர்ப்பு! பாவம் வரலாறு தெரியாமல் பேசுகிறார்: சித்தராமையா

தமிழிலிருந்து கன்னடம் உருவானது என்பது கன்னட மொழிக்கு பெருமைதானே தவிர சிறுமை அல்ல் ஒருவேளை அந்த கருத்தில் கன்னட அமைப்புகளுக்கு மாற்றுக் கருத்து ஏதேனும் இருந்தால், தமிழைவிட கன்னடம்தான் மூத்த மொழி என்பற்கான வரலாற்று ஆதாரங்களை, இலக்கியச் சான்றுகளை, மொழியறிஞர்களின் ஆய்வு முடிபுகளைத் தந்து அறவழியில் மறுக்க வேண்டும் ஆக்கப்பூர்வமான வாதங்களை முன்வைக்க வேண்டும். காவிரியில் தமிழகத்திற்கு தண்ணீர் தரக்கூடாது என்று சொன்ன கன்னட திரைக்கலைஞர்களின் திரைப்படங்கள் தமிழகத்தில் திரையிடப்பட்டுக் கொண்டுதானே இருக்கின்றன?

ஏற்கனவே, காவிரி நதிநீர் போராட்டத்தின் போது முதல்வர் ஸ்டாலினின் உருவப்படத்தை செருப்பால் அடித்தும், இறுதி மரியாதை செய்தும் கன்னடவெறி அமைப்புகள் அவமதித்தபோது எவ்வித எதிர்வினையும் ஆற்றாது தமிழக அரசு அமைதியாக கடந்துபோனதைப்போல, தற்போதும் கடந்து போகக்கூடாது.

உண்மையறியாது போராடும் கன்னட இனவெறி அமைப்புகளுக்கு ஆதரவாக கர்நாடகமாநில முதல்வர் சித்தராமையா, தமிழ்த்திரையின் பெருமைமிக்க கலை அடையாளம் கமல்ஹாசனுக்கு வரலாறு தெரியவில்லை என்று அவமதிக்கின்றார். ஆனால், அதற்கு பதிலடி தரவேண்டிய தமிழக முதல்வர் ஸ்டாலின் இதுவரை வாய்திறவாமல் அமைதியாக இருப்பது ஏன்? கள்ள அமைதியை கடைபிடிப்பதன் மூலம் கமல்ஹாசனை மட்டுமல்ல, அன்னை தமிழையே அவமதிக்கின்றீர்கள்.

எனவே, கூட்டணி கட்சியான கர்நாடக காங்கிரஸ் அரசிடம் பேசி, போராடும் கன்னட அமைப்புகளைக் கட்டுப்படுத்தி தேவையற்ற பதற்றத்தைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## பிரபல நடிகர் ராஜேஷ் காலமானார்



தமிழ் சினிமாவின் மூத்த நடிகர் ராஜேஷ், 75, சென்னையில் காலமானார். இன்று காலை திடீரென அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டார். ஆனால் வழியிலேயே அவரது உயிர் பிரிந்தது. முதல்வர் ஸ்டாலின், விடுதலை சிறுத்தை கட்சிதலைவர் திருமாவளவன் நேரில் அஞ்சலி செலுத்தினர். மேலும் திரையுலகினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் 1949ம் ஆண்டு டிசம்பரில் 20ல் பிறந்தவர் ராஜேஷ். பள்ளி ஆசிரியர் பணியை துறந்து அரிதாரம் பூசி சினிமாவில் நடித்தார். 1974ல்கே.பாலசந்தர் இயக்கிய 'அவள் ஒரு தொடர்கதை' என்ற படத்தில் சிறு வேடத்தில் நடித்தார். வெள்ளித் திரையில் அறிமுகமான முதல் படம் இது. கன்னிப் பருவத்திலே, அந்த 7 நாட்கள், அச்சமில்லை அச்சமில்லை உள்ளிட்ட ஏராளமான படங்களில் நடித்துள்ளார். ஹீரோ, வில்லன், குணச்சித்ரம் என 150க்கும் மேற்பட்ட படங்களில் நடித்தார்.

இவரது மனைவி ஜோன் சில்வியா ஏற்கனவே இறந்துவிட்டார். திவ்யா, தீபக் என்ற மகளும், மகனும் உள்ளனர். ராஜேஷின் உடல் சென்னை, ராமாபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அவர் மகள் அமெரிக்காவில் இருந்து சென்னை வந்ததும் அடக்கம் செய்யப்படும். இவரின் திடீர் மறைவு திரையுலகினர், ரசிகர்கள் இடையே அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியை சேர்ந்த ராஜேஷ் 1949ம் ஆண்டு டிசம்பரில் 20ல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை திண்டுக்கல், வடமதுரை, மேலநத்தம், அணைக்காடு ஆகிய ஊர்களில் படித்து, பியூசி படிப்பை காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் படித்தார். பின்னர் ஆசிரியருக்கான பயிற்சியையும்பெற்ற அவர் சென்னை, ராயபுரம், புரசைவாக்கம் போன்ற பகுதிகளில் உள்ள பள்ளிகளில் சில ஆண்டுகள் ஆசிரியராக வேலை பார்த்தார். சினிமா மீது ஆர்வம் கொண்ட இவர் ஆசிரியர் பணியில் இருந்து கொண்டே சினிமா வாய்ப்பு தேடினார். நடிகை சுகுமாரியின் மூலம் இயக்குநர் கே பாலசந்தரின் அறிமுகம் கிடைக்க அவரின் 'அவள் ஒரு தொடர்கதை' படம் மூலம் மக்கள் தொகை கணக்கெடுப்பாளராக சிறு வேடத்தில் நடித்தார்.

1979ல் பிவி பாலகுரு இயக்கிய 'கன்னிப் பருவத்திலே' படம் மூலம் நாயகனாக அறிமுகமானார். இதில் வில்லனாக பாக்யராஜ் நடித்தார். இப்படம் சூப்பர்ஹிட்டானது. தொடர்ந்து 'தனிமரம், தைப்பொங்கல், நான் நானேதான்' ஆகிய படங்களில் முக்கிய வேடங்களில் நடித்தாலும் பாக்யராஜ் இயக்கம், நடிப்பில் வெளிவந்த 'அந்த 7 நாட்கள்' படம் இவரை மேலும் பிரபலமாக்கியது.

தொடர்ந்து 'அச்சமில்லை அச்சமில்லை, ஆலயதீபம், 'சிறை, அம்மாவும் நீயே அப்பாவும் நீயே' போன்ற படங்கள் இவரது திரைப்பயணத்தில் குறிப்பிடும்படியான திரைப்படங்களாக அமைந்தன. மென்மையான நடிப்பிற்கும், கணீர் குரலுக்கும் சொந்தக்காரரான ராஜேஷ் படங்கள் தவிர்த்து 'அலைகள்', 'ஆண்பாவம்', 'அக்கா', 'களத்து வீடு', 'ரோஜா', 'சூர்யவம்சம்' என ஏராளமான சின்னத்திரை தொடர்களிலும் நடித்தார்.

'டும் டும் டும்', 'ஜ/ட்', 'மஜா', 'உள்ளம் கேட்குமே', 'ராம்' போன்ற படங்களில் மறைந்த மலையாள நடிகர் முரளிக்கும், 'பொய் சொல்லப்போறோம்' படத்தில் மறைந்த மலையாள நடிகர் நெடுமுடி வேணுவிற்கும் டப்பிங் கொடுத்துள்ளார்.

சினிமா தவிர்த்து ரியல் எஸ்டேட், ஹோட்டல் பிஸினஸ் போன்ற தொழில்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவர், ஜோதிடம் பற்றி பல புத்தகங்கள், கட்டுரைகளையும் எழுதி உள்ளார். இப்படி பன்முக திறமை கொண்ட இவர் தனது 49 ஆண்டுகால கலைப்பயணத்தில் ஏறக்குறைய 150க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

# அனுபவமே சிறந்த வழிகாட்டி!



வன்முறைகளைத் தீர்க்க முனையும் பல தலைவர்களிடம், “உங்கள் ஆழ்ந்த ஈடுபாட்டிற்கு என்ன காரணமாக இருக்கக்கூடும்?” என்று கேட்டால், பலருக்குச் சின்ன வயதில் அவர்களுக்கே அந்த அனுபவம் ஏற்பட்டிருக்கலாம் என்பது தெரியவரும். வெளியே சொல்ல தைரியம் வராமல் மனதிற்குள்ளேயே அசை போட்டு, ஒரு வழியாகத் தன் மீது தவறு இல்லை என்பதை உணர்ந்து பேச வந்திருக்கிறார்கள்.

ஒரு வழிப்போக்கர் கூட்டத்திற்கு உரையாற்ற வந்தவரிடம், “உங்களுக்கு ஏன் இந்த அளவு அக்கறையும் தீவிரமும்?” என்று கேட்கப்பட்டபோது அவர் சொன்னார்: “நான் கல்லூரியில் இளங்கலை படித்துக்கொண்டிருக்கும் போது வன்புணர்வுக்கு ஆளானேன். அப்போது பலரும் இதைத் தடுத்து நிறுத்த முடியும் என்றிருந்தும், தனக்கு ஏதாவது ஆகுமோ என்று கவலைப்பட்டு பார்வையாளராகச் சென்றுவிட்டார்கள். காவல்நிலையத்தில் வழக்கு என்று வந்தால் சாட்சியாளராக அலைய வேண்டி இருக்குமோ, நேரம் விரயமாகுமோ என்கிற கவலைகள். தனக்குக் காவலர்களால், வன்புணர்வாளர்களால் ஏதேனும் நேருமோ என்று அஞ்சி சென்றுவிட்டார்கள். அந்தக் கொடுமையில் இருந்து மீள எனக்கு 30 ஆண்டுகள் தேவைப்பட்டது. அந்தத் துன்பம் இன்னொருவருக்கு நேரக் கூடாது என்பதற்காக நான் இதில் ஈடுபடுகிறேன்” என்று சொல்லும்போது, அவரின் தீவிரம் ஒரு நம்பகத்தன்மையைக் கொண்டுவருகிறது.

இங்கு நாம் சிந்திக்க வேண்டிய முக்கியமான ஒரு விஷயம் பச்சைப் புள்ளி உத்தியின் (புசநநெ னுழவ ளுவசயவநபல) வண்ணத்துப்பூச்சி விளைவு. ஒரு வண்ணத்துப்பூச்சி தன் சிறகடிப்பால் தொலைதூரத்தில் புயலைக்கூட உருவாக்கலாம் என்பது போல, நமது சிறிய செயல்கள் பெரிய மாற்றத்தை உருவாக்கும். ஒவ்வொரு வன்முறைச் சூழலிலும் (சிவப்புப் புள்ளிகள்) பார்வையாளர்களின் சிறு தலையீடுகளும் (பச்சைப் புள்ளிகள்) பெரும் பாதிப்புகளைத் தடுக்கும் வல்லமை கொண்டவை.




இன்னோர் உதாரணம்: ஒரு தன்னார்வலர், தான் பார்த்த, கேட்ட அனுபவங்களைக் கூறலாம். உதாரணமாக, ஒரு கல்லூரி விடுதி மேற்பார்வையாளர் பேசும்போது, “நான் கல்லூரி வளாகத்தில் பல வருடங்களாகப் பணிபுரிகிறேன். இதுவரை பல மாணவிகளைப் பார்த்திருக்கிறேன் உங்களுக்கு முன்னும், உங்களுக்குப் பின்னும் பார்ப்பேன். மாணவிகள் ஒரு விழாவில் பானங்களை ஆண் நண்பர்களோடு அருந்தும்போது கவனமாக இருக்க வேண்டும். தங்கள் கோப்பைகளைக் கீழே வைத்து கவனக் குறைவாக இருந்தால், யாரேனும் அதில் போதை மருந்துகளைக் கலக்க வாய்ப்பு இருக்கலாம். இதை ஏன் சொல்கிறேன் என்றால், ஒரு பெண்ணின் பழச்சாறில் அவளறியாமல் போதை மருந்து கலக்கப்பட்டு, அவள் வன்புணர்வுக்கு ஆளான நிகழ்வை அறிவேன்” என்று சொல்லும்போது, அதில் நம்பகத்தன்மை அதிகரிக்கிறது.



“இதில் எனக்கு இன்னும் அதிக ஆர்வம் இருப்பதற்கு மேலும் ஒரு காரணம் இருக்கிறது. என்னுடைய மகளுக்கும் எனக்கும் நல்ல நட்பு உண்டு. மிகுந்த பாதுகாப்போடு வளர்த்ததாகத்தான் நினைத்திருந்தேன். ஆனால் அவளுடைய 16வது பிறந்த நாளன்று அவளுக்குப் பாலியல் சீண்டல்கள் நடந்தன. என்னதான் இது குறித்த விழிப்புணர்வும் புரிதல்களும் இருந்தாலும், சில அசம்பாவிதங்களைத் தவிர்க்க முடிவதில்லை. அதனால் நான் இன்னும் அதிதீவிரமாக வன்முறைகளைத் தவிர்க்க விரும்புகிறேன்.” இப்படி ஒரு பேச்சாளர் முற்றிலும் விலகாமல் பிரச்சினையைத் தொட்டுப் பேசினால், கேட்கும் மக்களுக்கும் அதில் ஒரு ஈடுபாடு உருவாகும்.

பச்சைப் புள்ளி உத்தியின் அடிப்படையில், ஒவ்வொரு தனிநபரும் வன்முறையைத் தடுக்கும் பச்சைப் புள்ளியாக மாற முடியும். இது தனிப்பட்ட நேரடி தலையீடுகள், திசைதிருப்பும் செயல்கள், அல்லது மற்றவர்களை அணுகி உதவி கேட்பது போன்ற எளிய செயல்களாக இருக்கலாம். இந்தச் சிறிய செயல்கள்கூட வன்முறைச் சூழலை (சிவப்புப் புள்ளிகளை) மாற்றிவிடும் ஆற்றல் கொண்டவை.

வழிப்போக்கர்கள் வன்முறையை, “இப்படித்தான் தடுக்க வேண்டும், இதில் வரும் இடையூறுகளை இப்படியெல்லாம் எதிர்கொள்ள வேண்டும்” என்று சொல்வதால் மட்டும் மக்கள் அதைக் கேட்டு நடக்கப் போவதில்லை. பேசுபவர்களும் அதில் ஓர் அங்கமாகி, அவர்களின் உண்மையான அனுபவங்களைப் பகிரும்போதுதான் ஆர்வமும் அர்ப்பணிப்பும் அதிகரிக்கிறது. நம்பகத்தன்மையும் ஏற்படுகிறது. ஏதேனும் இடையூறுகள் வந்தால், “இவர் சமாளித்ததைப் போல நம்மாலும் முடியும்” என்கிற ஊக்கமும் பிறக்கிறது. இதுவே பச்சைப் புள்ளி உத்தியின் மையக் கருத்து வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பு போல சிறிய செயல்களும் பெரிய மாற்றத்தை உருவாக்கும்.

ஒவ்வொரு வன்முறை நிகழ்வின்போதும், நாம் அதைவிட்டு விலகாமல், அதை நம் நிகழ்வாக நோக்கும்போது வன்முறைகள் நிகழ்வது குறையும். காஷ்மீரில் நடந்த வன்முறைக் கொடூரத் தாக்குதலில் உயிரிழந்தவர்களைப் போல, அத்தகைய தீவிரவாதத் தாக்குதல்கள் இனி நடக்காத வண்ணம் தடுக்க என்ன செய்ய வேண்டும் எனச் சிந்திக்க வேண்டும். நம் ஒவ்வொருவரின் சிறிய தலையீடுகளும் பச்சைப் புள்ளிகளாகப் பரவி பெரும் வன்முறைகளைத் தடுக்கும் சக்தி கொண்டவை.

ஒரு வழி: எல்லோரையும் ஒரு கணம் நம் உறவினராக நினைப்பது. அந்தக் கூட்டத்தில் இருக்கும் பெண் நம் மகள், மருமகள், சகோதரி அல்லது அன்னை என்று மனக்கண் முன்னே உருவகித்தல். அல்லது ஆண் நம் மகன், சகோதரன், அண்ணன் அல்லது தந்தை என்று உருவகித்தல். இந்தத் தாக்குதலால் உயிரிழக்க அல்லது கைகால்கள் இழக்க நேர்ந்தால், அவர்கள் வாழ்க்கை எப்படி மாறும் என்று யோசித்து, பின்விளைவுகளைச் சிந்தித்தால் எப்படி மாறும்? இந்தச் சிந்தனை பச்சைப் புள்ளி உத்தியின் முக்கிய அங்கம் உணர்வுபூர்வமான இணைப்பு மூலம் நெடுஞ்சாலைப் பாதுகாப்பு கருதி தாமதப்படுத்தும் சிறு செயலைப் போலவே, சின்ன சின்ன வன்முறைகளாவது இதனால் தடுக்கப்படும். தீவிரவாத இயக்கங்களால் மூளைச்சலவை செய்யப்பட்டு நடக்கும் பெரிய விளைவுகள் வேண்டுமானால் அரங்கேறும்.

இன்னும் ஒரு வழி இருக்கிறது: நாம் வழிப்போக்கர்களாக வன்முறை நிகழ்வைப் பல காரணங்கள் காட்டித் தடுக்காமல் கடந்து சென்றுவிடலாம். நமக்கு இழப்பு ஒன்றும் இல்லை. ஆனால் அதேபோல, ஒரு வன்முறையில் நாமோ நம் மகளோ மகனோ சிக்கியிருக்கும்போது, பார்க்கிற யாரோ ஒருவர் அதைத் தன் சுயபாதுகாப்பு, சுயநலம் கருதித் தடுக்காமல் சென்று, நமக்குப் பேரிழப்பு நிகழ்ந்தால், நமக்கு எப்படி இருக்கும் என்று ஒரே ஒரு கணம் எண்ணிப் பாருங்கள்.

வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பு எப்படித் தொலைதூரத்தில் புயலை உருவாக்க முடியுமோ, அதைப்போலவே நம் ஒவ்வொருவரின் சிறிய, ஆனால் துணிவான செயல்கள் பச்சைப் புள்ளிகள் வன்முறை என்கிற சிவப்புப் புள்ளிகளைத் தடுக்கும் சக்தி கொண்டவை. சிலரின் வாழ்நாள் துயரங்களைத் தடுக்க முடியும் என்றால், அதற்காக நாம் சில சின்ன தடைகளைத் தாண்டுவதில் தவறே இல்லை என்று புரியும். நம் ஒவ்வொரு சிறு செயலும் பச்சைப் புள்ளியாகப் பரவி, ஒரு வன்முறையற்ற சமூகத்தை உருவாக்க வழிவகுக்கும்.

# சீன மாணவர்களின் விசாவை ரத்து செய்ய அமெரிக்கா முடிவு



சீனாவைச் சேர்ந்த மாணவர்களின் விசாவை அதிரடியாக ரத்து செய்ய முடிவு செய்துள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக சீன மாணவர்கள் தான் அதிகம் பயின்று வருகின்றனர். கடந்த 2023-24ம் ஆண்டு கல்வியாண்டில் மட்டும் சுமார் 2,70,000 சீன மாணவர்கள் அமெரிக்காவில் பயின்று வருகின்றனர். அங்கு பயிலும் வெளிநாட்டு மாணவர்களில் 4ல் ஒரு பங்கு சீன மாணவர்கள் என்னும் அளவுக்கு எண்ணிக்கையில் உள்ளனர்.

இந்த சூழலில், ஹார்வர்டு பல்கலை நிர்வாகத்துடன் அதிபர் டிரம்புக்கு மோதல் போக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், பல்கலைக்கு வழங்கப்படும் நிதியை குறைத்த அவர், அங்கு பயிலும் வெளிநாட்டு மாணவர்கள் சேர்க்கையை நிறுத்தி வைக்க உத்தரவிட்டார். மேலும், வெளிநாட்டு மாணவர்கள் சேர்க்கைக்கான இடஒதுக்கீட்டையும் 25 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக குறைத்தார். இந்த நிலையில், சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு கொண்டவர்கள் சீன மாணவர்களுக்கான விசாக்களை ரத்து செய்ய முடிவு செய்துள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார். மேலும், வெளிநாட்டு மாணவர்களுக்கான விசா நடைமுறைகளை இன்னும் கடினமாக்க பரிசீலனை செய்யுமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

ஹார்வர்டு பல்கலையின் ஆராய்ச்சி பணிகளில் சிலர், சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதாக உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை குற்றம் சாட்டியுள்ளது. மேலும், சீன துணை ராணுவக் குழுவின் உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனடிப்படையில் டிரம்ப் தலைமையிலான அரசு நிர்வாகம் இந்த முடிவை எடுத்துள்ளதாக மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார். (ஐ)

## அதிபர் டிரம்ப் நிர்வாகத்தில் இருந்து வெளியேறினார் எலான் மஸ்க்!



அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் நிர்வாகத்தில் இருந்து வெளியேறுவதாக சமூக வலைதளத்தில் தொழிலதிபர் எலான் மஸ்க் பதிவிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபர் டிரம்பின் நெருக்கமான நண்பர் எலான் மஸ்க். இவர் ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா, எக்ஸ் சமூக வலைதளம் ஆகியவற்றின் தலைமைச்செயல் அதிகாரியாக உள்ளார். கடந்த ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் டிரம்பை ஆதரித்து இவர் தீவிர பிரசாரம் செய்தார்.

டிரம்ப் அதிபராக பொறுப்பேற்ற பின் எலான் மஸ்க்கை சிறந்த நிர்வாகத்துக்கான துறை தலைவர் என்ற சிறப்பு பதவியில் அமர்த்தினார். அமெரிக்க அரசின் செலவுகளை குறைப்பது, நிறுவனங்களை சீரமைப்பது போன்ற பணிகள் ஒப்படைக்கப்பட்டன. மஸ்க் பொறுப்பேற்ற பின் இதுவரை அரசின் செலவுகளில் 10 லட்சம் கோடி ரூபாயை மிச்சப்படுத்தி இருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன.

ஸ்டார்ஷிப் ராக்கெட் சோதனை தோல்வி:பெரிய முன்னேற்றம் என்கிறார் எலான் மஸ்க்

மஸ்க் இந்த பதவியில் 130 நாள் பணியாற்றுவதற்கு ஒப்புக் கொண்டிருந்தார். அவரின் பதவிக்காலம் இந்த மாத இறுதியில் முடிவடைகிறது.

இந்நிலையில் இன்று (மே 29) அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் நிர்வாகத்தில் இருந்து வெளியேறுவதாக, எலான் மஸ்க் அறிவித்துள்ளார். இதுகுறித்து சமூக வலைத்தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது:

சிறப்பு அரசு ஊழியராக எனது திட்டமிடப்பட்ட காலம் முடிவடையும் நிலையில், வீண் செலவுகளைக் குறைப்பதற்கான வாய்ப்பை வழங்கியதற்காக அதிபர் டிரம்புக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## உக்ரைனுக்கு ஆதரவுக்கரம் நீட்டும் ஜெர்மனி அதிபர் மெர்ஸ் எடுத்த முடிவு



ரஷ்யா - உக்ரைன் நாடுகளுக்கு இடையே 3 ஆண்டுகளாக தொடர்ந்து போர் நடைபெற்று வருகிறது. போரை நிறுத்த அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.


இந்த தாக்குதலை எதிர்கொள்ள தங்களின் ஆதரவு நாடுகளிடம் ராணுவ உதவிகளை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கேட்டு வருகிறார். அந்த வகையில், அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக, உக்ரைனுக்கு அதிக ராணுவ உதவி வழங்கி வரும் ஜெர்மனியின் உதவியை நாடி உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி சென்றுள்ளார். மேலும் ராணுவ ஆதரவை பெறும் விதமாக, புதிய அதிபர் பிரீட்ரிச் மெர்ஸை, ஜெலன்ஸ்கி சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின் போது, நீண்ட தூர ஏவுகணை அமைப்புகளை உருவாக்க உதவுவதாக பிரீட்ரிச் மெர்ஸ் உறுதியளித்தார். மேலும், இதன் பயன்பாட்டில் எந்த வரம்பும் விதிக்கப்படாது என்று உறுதியளிக்கப்பட்டிருப்பது. இது இருநாடுகளுக்கு இடையேயான போரை தீவிரப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

கடந்த 3 ஆண்டுகளாக நேட்டோ அரசுகள், உக்ரைனுக்கு வழங்கிய மேம்படுத்தப்பட்ட ஆயுதங்களில் தூரம் மற்றும இலக்குகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. காரணம், ரஷ்யாவின் முக்கிய பகுதிகளில் உக்ரைன் தாக்குதல் நடத்தினால், போர் விரிவடைந்து விடும் என்ற அபாயத்தினால் நேட்டோ நாடுகள் இந்தக் கட்டுப்பாடுகளை விதித்தன.

ஆனால், உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதலை தீவிரப்படுத்தி வரும் நிலையில், அந்தக் கட்டுப்பாடுகளை அமெரிக்கா, ஜெர்மனி நாடுகள் தளர்த்தும் முடிவை எடுத்து வருகின்றன. (ஐ)

## ஸ்டார்ஷிப்பின் ஒன்பதாவது சோதனை ராக்கெட் தோல்வி



நிறம் மற்றும் எழுத்துரு அளவு மாற்ற

டெக்ஸாஸ்: 'ஸ்பேஸ்எக்ஸ்' விண்வெளி நிறுவனத்தால் விண்ணில் செலுத்தப்பட்ட ஒன்பதாவது 'ஸ்டார்ஷிப்' சோதனை ராக்கெட்டும் கட்டுப்பாட்டை இழந்து கடலில் விழுந்தது. அமெரிக்காவின் மிகப்பெரும் தொழிலதிபர் எலான் மஸ்கின் விண்வெளி நிறுவனம் 'ஸ்பேஸ்எக்ஸ்'. இந்நிறுவனம் 'ஸ்டார்ஷிப்' என்ற பெயரில் மறுபயன்பாட்டு விண்கலை திட்டத்தை சோதித்து வருகிறது.

இந்த திட்டம் வெற்றி பெற்றால், விண்வெளி பயணச் செலவு குறையும். விண்வெளி ஆய்வை மிகவும் மலிவானதாக மாற்ற முடியும் என்கின்றனர்.

டெக்ஸாஸில் உள்ள 'ஸ்டார்பேஸ்' விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து 'ஸ்டார்ஷிப்' சோதனை ராக்கெட்டுகளை 'ஸ்பேஸ்எக்ஸ்' ஏவி வருகிறது. 400 அடி நீளம் உடைய இந்த ராக்கெட்டில் இரண்டு முக்கிய பகுதிகள் உள்ளன.

ஒன்று விண்வெளி வீரர்கள் மற்றும் சரக்குகளை ஏற்றிச் செல்லும் விண்கலப் பகுதி.

இரண்டாவது 'சூப்பர் ஹெவி பூஸ்டர்' எனப்படும் விண்கலத்தை ஏவுவதற்கான 33 'ரேப்டர் என்ஜின்கள்' உள்ள பகுதி. ராக்கெட்டின் வெப்பக் கவசத்தின் செயல்பாடு மற்றும் பூஸ்டர் பகுதியை மீண்டும் தரையிறக்குதல் ஆகிய சோதனைகளுக்காக 'ஸ்டார்ஷிப்' ராக்கெட்டை தாழ் புவி வட்டப்பாதை வரை செலுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை எட்டு 'ஸ்டார்ஷிப்'புகள் ஏவப்பட்டன. அவை எதுவும் இலக்குகளை பூர்த்தி செய்யவில்லை. இந்நிலையில், நேற்று டெக்ஸாஸ் ஏவுதளத்தில் இருந்து ஒன்பதாவது 'ஸ்டார்ஷிப்' ராக்கெட் ஏவப்பட்டது. அது எரிபொருள் கசிவு காரணமாக நடுவானில் கட்டுப்பாட்டை இழந்து கடலில் விழுந்தது.

இது குறித்து 'ஸ்பேஸ்எக்ஸ்' தலைமை நிர்வாக அதிகாரி எலான் மஸ்க் வெளியிட்ட அறிக்கையில், 'தற்போது ஏவப்பட்ட 'ஸ்டார்ஷிப்' என்ஜின்கள் திட்டமிட்டப்படி நிறுத்தம் கண்டன. கடந்த ராக்கெட்டுகளுடன் ஒப்பிடுகையில், இது மிகப்பெரிய முன்னேற்றம். வெப்ப கவசமும் சேதமடையவில்லை.

'ஆய்வு செய்ய நிறைய நல்ல தரவுகள் உள்ளன. அடுத்தது மூன்று 'ஸ்டார்ஷிப்'புகள் மாதம் ஒன்று என்ற முறையில் விரைவாக ஏவப்படும்' என கூறினார். (ஐ)

## மஹிந்தானந்தாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாமால் இன்று இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கரம்போர்ட் கொடுக்கல், வாங்கல் தொடர்பில் பிரதிவாதிகளுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் விசாரணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதையடுத்தே இவ்வாறு கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மஹிந்தானந்த அளுத்கமகே விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்தபோது சதொசவின் தலைவராக நளின் பெர்னாண்டோ பதவி வகித்தார்.

2015 ஜனாதிபதித் தேர்தலின்போது சதொக ஊடாக கரம்போர்ட் உள்ளிட்ட விளயைாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்து விளையாட்டு கழகங்களுக்கு வழங்கியுள்ளனர். இதன்மூலம் அரசுக்கு 53 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீர்கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது ஒருவர் மற்றைய நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

எவ்வாறிருப்பினும், துப்பாக்கிச் சூட்டின் போது எந்தவித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து தகராறி ஈடுபட்ட நபர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் வர்த்தகர் ஒருவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மகசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மகசின் சிறைச்சாலைக்குச் சென்றிருந்த போது சிறைச்சாலை அதிகாரிகளால் சோதனைக்குட்படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேகநபரான சிறைச்சாலை அதிகாரியிடமிருந்து 16,112 மில்லிகிராம் ஹெரோயின், 12,924 மில்லிகிராம் ஐஸ் மற்றும் 73,855 மில்லிகிராம் புகையிலை உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்துக் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொரளை பொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொரளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## துமிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முலாம் பூசப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கொழும்பு, பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வைத்து கடந்த 23 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த துமிந்த திஸாநாயக்க, சுகயீனம் காரணமாகக் கடந்த 25ஆம் திகதி சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (27) மீண்டும் மகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், துமிந்த திஸாநாயக்க இன்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாணாந்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இன்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

பாணந்துறை, வேகட பிரதேசத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர், மோட்டார் சைக்கிள்களின் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் கடை ஒன்றில் இருந்த பணியாளர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் சிகிச்சைக்காகப் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.மவட்டத்மைத

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் எவை, அவை எவ்வாறு முன்னெடுக்கப்படும், அதன்மூலம் மக்களுக்கும், நாட்டுக்கும் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அமைச்சருக்கு, நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணத்துக்கான திணைக்கள அதிகாரிகளால் மேற்படி கலந்துரையாடலின்போது தெளிவு படுத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சுற்றாடல், சுற்றுலா உட்பட சகல விடயங்களுக்கும் மீண்டெழும் அலைகள் என்ற தூர நோக்கத்துக்குள் உள்வாங்கப்பட்டு, கட்டியெழுப்படவுள்ளன. இதன்மூலம் யாழ். மாவட்டம் மறுமலர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நகர அபிவிருத்தி சபை அதிகாரிகளின் திட்டத்தைக் கண்காணித்த பின்னர், தமது தரப்பிலுள்ள யோசனைகளையும் அமைச்சர் முன்வைத்தார். வளமானதொரு யாழ். மாவட்டத்தை கட்டியெழுப்புவதற்கு இந்தத் திட்டம் பக்கபலமாக இருக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேற்படி சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், ஸ்ரீ பவானந்தராஜா, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் இணைப்பாளர் ஸ்ரீ வாகீசன், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் விரிவுரையாளருமான சு.கபிலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 61 ஆவது ஜனன தினம் அனுஷ்டிப்பு







கொட்டகலை, மே 29

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் அமைச்சருமான அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 61 ஆவது ஜனன தினம் ,ன்று அனுஷ்டிக்கப்பட்டது. கொட்டகலை சி.எல்.எப் ஆறுபடை தாயுமான சிவன் ஆலய வளாகத்தில் விசேட பூஜை வழிபாடுகளுடன் அன்னாரின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து ஜனன தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை, ,.தொ.கா. தலைமைக் காரியாலயம் கொழும்பு - சௌமியபவனிலும் விசேட பூஜை வழிபாடுகளும் ,டம்பெற்றிருந்தன.

இந்தப் பூஜை வழிபாட்டில் ,லங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான், கட்சியின் தவிசாளரும் நிதிச்செயலாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன், அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஐயாவின் பாரியார் ராஜலஷ்சுமி தொண்டமான் உட்பட இதொ.கா. உயர்பீட உறுப்பினர்கள், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், மாவட்டத் தலைவர், தலைவிமார்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# போதைப்பொருட்களுடன் எழுவர் கைது!

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணம், சுன்னாகம்பொலிஸ் பிரிவில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின்போது எழுவர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் போதை மாத்திரைகளுடனும், இருவர் ஐஸ் போதைப்பொருளுடனும், மேலும் இருவர் ஹெரோயின் போதைப்பொருளுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் ஒருவர், 3.2 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக ஏற்கனவே 8 கிராம் ஹெரோயினுடன் தொடர்புடைய வழக்கு ஒன்று நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.05.2025 வெளியிடப்பெற்றது.